முன் பக்கத் தொடர்: அபாயம் வந்துவிட்டது! தப்பிப் பிழைக்க வழி தேடு என்று நம்மை துரிதப்படுத்துவது வேதனை * மிருகங்களை விட வேதனையை அதிகமாகத் தாங்கும் ஆற்றல் மனிதனுக்குண்டு * அடிக்கடி அடிகள் படுவதனாலும் காயங்கள் ஏற்படுவதனாலும் வேதனையைத் தாங்கும் தன்மை ஏற்பட்டு விடுகிறது * மன உறுதி பெற்றுக் கொள்வதனாலும் வேதனையைத் தாங்க முடியும் * ஸ்திரீகளுக்குச் சாதாரணமாக வேதனையைத் தாங்கும் சக்தி குறைவு. கொஞ்சம் வேதனை ஏற்பட்டாலும் ராகளம் செய்வதே இவர்கள் இயற்கை குணம் * வேதனை ஏற்படும் போது மனம் அமுண்டு விடுகிறது; அமைதியற்றுப் போகிறது. மரவட்டை மனம் * உடலிலிருந்து மனத்தை வேறாகப் பிரித்து, உடல் படும் வேதனையை உணராது விலக்கி தன் மனத்தைக் கொண்டுவரமுடியும் * பழகப்பழகத் துன்பங்களை அலட்சியம் செய்வோம். துன்பங்கள் நம்மை அளவு கடந்து பாதித்தால் பொறுக்கும் திறமையை பழக்கத்தினால் முடியும் * தாங்கமுடியாத பல துன்பங்கள் கவலைகள் மனதில் தோன்றினால் புதிய நோய் உண்டாவதுபோல, வேதனை அதிகரிப்பதுபோல காணலாம் * "துக்கம், துயரம், துன்பம் என்பவற்றைப் போல வேதனையும் ஆத்மாவைச் சுத்தம் செய்கின்றது. கடவுள் எனக்கு அடிக்கடி வலிகளைத் தந்துக் கொண்டே இரு அப்போதுதான் நான் உன்னை நினைத்துக் கொண்டேயிருக்கமுடியும் * வேதனை, துயரம் இவையவற்றை அனுபவிக்கின்றவன்தான் சுகத்தையும் நன்றாக அனுபவிப்பான் * பிரசவ வேதனை! மரண வேதனை இவ்விரண்டும் உலகிலுள்ள வேதனைகளெல்லாம் தலையாயது * பெண்ணினத்திற்குப் பிரசவ வேதனையே அபாய சங்கு போன்றது! * பிரசவ வேதனை இல்லாத பிராணிகள் தம் மக்களிடம் அன்பு பாராட்டுவது இல்லை * இவ்வளவு ஜீவராசி அனைத்தும் வேதனையாலே பிறந்து வேதனையை அனுபவித்து வேதனையாலே மரிக்கின்றன * பிறப்பும் வேதனை இறப்பும் வேதனையே * வாழ்வுக்கும் அன்புக்கும் வழிகாட்டியாக இருப்பது வேதனை * வந்த வேதனையை பயன்படுத்திக் கொண்டு தம்மை சார்ந்தவர்களை அடிமையாக்கி ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவோருமுளர் * அன்பும் ஆதரவும் பெற வேதனையை வரவழைத்துக் கொள்வோருமுளர் * வாழ்க்கை ஒரு மெல்லிய நூலிலே தொங்குவதாக கருதலாம். இயற்கை எண்ணினால் இரட்டிப்பு இந்த ஆதார நூல் அறுந்துவிடலாம் * பயம் என்ற மனநிலை மனிதனுக்குப் பிறவியிலிருந்தே இயல்பாகத் தோன்றுகிறது * உடலில் பயத்தினால் ஏற்படும் மாறுதல்கள் சேஷ்டைகள் காணப்படும். கண் இமையற்று நிற்கும்; இதயம் படபடவென்று அடிக்கும்; வயிறு பதைக்கும், உடல் முழுவதும் வேர்த்துவிடும், மயிர்க் கூச்செறியும், கைகால் குளிர்ந்து விடும், நாக்கு உலர்ந்துவிடும், உக்கிர பயத்தின் காரணமாக உயிரிழக்கும் ஆபத்து நேரிடும் * அறிவினால் பயம் வளர்வதுபோல், அறிவினாலேயே பயம் தெளிந்து விடுகிறது * மரணத்தைக் கண்டு அஞ்சுகிறோம், முடிவு காலம் கண்டு பயப்படுகிறோம். ஆனால் மரணவஸ்தையால் தப்பி பிழைத்தவனைக் கேட்டால் பரமசுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கையில் என்னை எழுப்பி விட்டீர்களே என்பான். மரணவஸ்தை உண்மையில் துயரமற்றது. துயரம் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் மரணம் சம்பவிக்கு முன் மூளையில் ரத்தக் குறைவு ஏற்பட்டு மரக்கறையற்று துயரத்துக்குரிய உணர்ச்சியில்லாமலே செய்யும். மரணவஸ்தையை பார்ப்பவர்களுக்குத்தான் மரணபயம் * துக்கத்தை அமுக்கினால் சில தருணங்களில் உயிருக்கே ஆபத்து விளையலாம். ஆதலால் வாய்விட்டழுது துக்கத்தை தீர்த்துக் கொள்கிறோம் * முதுமை வந்தேதீரும். ஆனால் கவலைப்பட்டு அதைச் சீக்கிரமாக வரவழைக்க வேண்டாம் * பயமென்பது அறியாமையினால் உண்டாவது * இயற்கை விதிப்படி மரணமுள்ள உயிர்களுக்கெல்லாம் முதுமை உண்டு * ஜீவ கோடிகளில் மனிதன் மட்டும் பார்த்தால் அறுபது வயதிற்குப்பால் முதுமை ஆரம்பித்து விட்டதாகவே கூறலாம் * மனப்பான்மை உடலின் சக்தியை மாற்றிவிடும் * முதியவர்களின் ஊன்றுகோல் இன்றும். புதியவைகளை ஏற்றுக் கொள்ள மனம் இசையாது தங்களுக்குத் தெரிந்ததே ஞானம் என்பார்கள் * புருஷர்களுடைய வாழ்நாளைவிட ஸ்திரீகளுடைய வாழ்நாள் நீடிக்கிறது. இது இயற்கையால் ஏற்பட்ட கள நியதிகளிலே ஒன்று * ஸ்திரீகள் தம் பிள்ளைகளை உதரத்திலே சுமக்கிற காலத்திலும் பெற்றபின் அவர்களை வளர்க்கும் காலத்திலும் தம்மையே எலும்புகளாயும் கூட உருக்கி ஊற்றிவிடுகிறார்கள் * முதுமை பருவம் இன்பமாக அமைய வேண்டுமானால் இளமையிலிருந்தே அதற்கு ஆயத்தம் செய்ய வேண்டும் * அகன்ற கல்வியால், தெளிந்த ஞானத்தினால், ஆழ்ந்த சிந்தனையால் மனத்தைப் பழக்கி ஆள பழகின்றவர்கள் எதையும் பெறமுடியும் * வாழ்க்கையின் காப்போருக்கு [illegible] காப்போருக வரு * வாழு வாகும் சாத்தியம். ஆனால், விவாகம் என்பது ஆத்மா போய்ந்து [illegible] ஒரு வாழ்க்கைச் சம்பவம் * ஐயா டாக்டரே ஆயுளை எப்படி நீடிக்கொள்வது என்று கேட்டார் ஒருவர். அதற்கு ஜோன்ஸ் "பாய்வதற்க் கொஞ்சம் வேடங்களைக் கொண்டு நீடித்த ஆயுளையுடைய தாய் தந்தையர் தேவை என்று மனைவியும் தேவை என்றார் * [illegible] வேதனையாக இருக்கக்கூடாது *